கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு.E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு மார்ச் 07ம் நாள், சனிக்கிழமை
அசல் வழக்கு எண்.121/2006
CNR No.TNMD130000722006
-----

1) பிச்சைத்தேவர் (இறப்பு)
2) அழகு (இறப்பு)
3) முருகேசன்
4) இருளப்பன்
5) மீனாட்சி
6) கட்சம்மாள்
7) பஞ்சவர்ணம்
8) போதும்பொண்ணு ... வாதிகள்

/ எதிர்/

1) சோனைத்தேவர் (இறப்பு)
2) ராமு
3) நடராஜன்
4) ஈஸ்வரன் (இறப்பு)
5) சோனை
6) செல்வம்
7) ஆனந்த்
8) லீலாவதி
9) விக்னேஷ்வரன்
10) நந்தினி பாரதி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 27.02.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.இப்ராகிம் அவர்கள் ஆஜராகியும், 2, 3, 5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.லாவண்யா அவர்கள் ஆஜராகியும், 8 முதல் 10 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையில், இரு தரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்குரை, எழுத்துப்பூர்வ வாதுரை மற்றும் எதிர்வழக்குரை, சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

தாவா சொத்தில் உள்ள வாதிகளின் அமைதியான அனுபவத்தை இந்த நிர் பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவு தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. வழக்குரை சுருக்கம் :–

1.1) தாவா 1வது இலக்க சொத்து ஆதியில் நாராயண ஐய்யங்காருக்கு பாத்தியப்பட்டு அவரிடமிருந்து 21.04.1964ம் தேதி பதிவு கிரையப் பத்திரத்தின் மூலம் 1ம் வாதியான வாதியின் தகப்பனார் பிச்சைத்

தேவருக்கும் மற்றும் வாதியின் சிறிய தாத்தா முருகாண்டித்தேவர் மகன் சொக்கலிங்கத்தேவருக்கும் கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா 2வது இலக்கச் சொத்து மேற்படி ஐய்யங்கார் மகன் ஜெகநாத ஐய்யங்காருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்தை 06.06.1955ம் தேதி 1ம் வாதியான வாதியின் தகப்பனாரின் தகப்பனார் இருளப்பத்தேவர் கிரையம் வாங்கி அனுபவித்து வந்ததாகவும், 3வது இலக்க சொத்து நாராயண ஐய்யங்கார் மகன் சீனிவாச ஐய்யங்காருக்கு கிரைய பாத்தியப்பட்டது என்றும்,

1.2) மேற்படி சீனிவாச ஐய்யங்கார் கிரையம் பெறுவதற்கு முன் 3வது இலக்கச் சொத்தில் கிழமேல் 30 அடி வாதியினுடைய தாத்தா இருளப்பத்தேவர் சிறிய தாத்தா முரகாண்டித் தேவருக்கு ஒத்தி பாத்தியதாரர்களாக அனுபவித்து வந்த நிலையில், மேற்படி ஒத்தியை கட்டுப்படுத்தி மேற்படி சீனிவாச ஐய்யங்கார் 08.02.1943 அன்று 3வது இலக்கச் சொத்தை கிரையம் பெற்று ஒத்தியை திருப்பாமல் இருந்த நிலையில், மேற்படி 3வது இலக்க சொத்தை வாதியின் சிறிய தாத்தா, பெரிய தாத்தா வாக்கரலாக கிரையம் பெற்று அதற்கு அத்தாட்சியாக அசல் கிரையப்பத்திரம் வாதிகளின் தாத்தா இருளப்பத்தேவர், முருகாண்டித்தேவர் வசம் ஒப்படைக்கப்பட்டு மேற்படி பத்திரம் அவர்கள் இறந்த பிறகு வாதிகளின் கைவசம் வைத்து மேற்படி 3வது இலக்க சொத்தை வாதியின் தகப்பனார் வைத்திருந்து அனுபவித்து வந்த நிலையில்,

1.3) தாவா 3வது இலக்க சொத்துக்கும் தெற்கே உள்ள சொத்தை பிரதிவாதிகள் கிரையம் பெற்று அனுபவித்து வரும் நிலையில், வடக்கே

வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 3வது இலக்க சொத்தில் 17.01.2006ம் தேதி வாதியின் தகப்பனாரும் குடும்ப உறுப்பினர்களும் இல்லாத போது அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்த போது கிராம மக்கள் பிரதிவாதிகளின் செயலை தடுத்து நிறுத்தி விட்டனர் என்றும், வாதியின் தகப்பனாரான 1ம் வாதியும், வாதியின் தாயாரான 2ம் வாதியும் இறந்துவிட்டபடியால் அவருடைய மக்களாகிய வாதி மற்றும் 4 முதல் 8 வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் உடமை அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருவதாகவும், பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்தில் யாதொரு பாத்தியமோ, அனுபவமோ கிடையாது என்றும், பிரதிவாதிகள் தாவாச் சொத்தை வாதிகளுடைய அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ததாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது.

## 2. <u>எதிர்வழக்குரை சுருக்கம்:</u>

2.1) நத்தம் புல எண்.214/23ல் கட்டுப்பட்ட சொத்தை பிரதிவாதிகளின் தாத்தா மற்றும் பாட்டி ஆகியோர் தகுந்த மறுபயன்களை கொடுத்து ஜெகந்நாத அய்யங்கார் என்பவரின் மகனான நாராயணன் அய்யங்காரிடமிருந்து கிரையம் பெற்று அனுபவித்து வந்து, நத்தம் நிலவரித் திட்டத்தின் போது பிரதிவாதியின் தாத்தா சோணைத் தேவர் பெயரில் பட்டா ஏற்பட்டு, மேற்படியார்கள் அனுபவித்து வந்த சொத்து என்றும், தற்போது மேற்படி புல எண்.214/20 வருவாய் ஆவணங்களில் சங்கர் என்பவரின் பெயரில் தாக்கலாகி உள்ளது என்றும், மேலும் புல எண்.214/22 வடக்கில் புல எண். 214/21 அமைந்துள்ளது என்றும், சந்து பகுதியான புல

எண்களான 214/22னை எவ்வகையிலாவது பிரதிவாதிகளிடமிருந்து கைப்பற்றி விட வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தான் இந்த வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தான புல எண் 214/21 மற்றும் புல எண்.214/18னை பிரதிவாதிகளின் தாத்தா மேற்படியார்களின் அனுபவத்திற்கு இடையூறு செய்வதாக கூறி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும்,

2.2) பொதுவாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி மீதான வழக்கு மூலம் உள்ளது என்றும், 1ம் பிரதிவாதி எப்பொழுது இறக்கின்றாரோ, அப்பொழுதே அந்த வழக்கிற்குண்டான வழக்குமூலம் அற்றுப்போய் விடுகிறது என்றும், அதனால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றும், வாதியானவர் தாவாச் சொத்துக்கள் எவற்றிற்கும் சரியான புல எண் குறிப்பிடப்படவில்லை என்றும், மேலும் புல எண்.214/22 ஆன அரசு சந்து பகுதியினை அபகரித்து விட வேண்டும் என்கிற நோக்கில் தான் தாவா வழக்கினைத் தாக்கல் செய்துள்ளனர் என்றும், புல எண்.214/22 அரசு சந்து என்பதால் தமிழக அரசும் ஓர் அவசிமான தரப்பினர், ஆனால் அரசாங்கத்தை ஓர் தரப்பினராக வழக்கில் சேர்க்கப்படவில்லை என்பதால் தாவா வழக்கானது அவசியமான தரப்பினர்களை சேர்க்காத தோசத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வாதி தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்றும், எனவே தாவா வழக்கினை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் எனக்கோரி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. எழுவினாக்கள் :

இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக நன்கு பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் இந்த நீதிமன்றத்தினால் வனையப்பட்டுள்ளன.

1. வாதிகள் தாவா சொத்தில் தனித்த சுவாதீனத்தில் உள்ளார்களா?
2. வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
3. இதர பரிகாரம் என்ன?

## 4. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :

4.1) வாதிகள் தரப்பில், வா.சா.1, வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வா.சா.1 மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.2) பிரதிவாதிகள் தரப்பில், பி.வா.சா.1, பி.வா.சா.2 விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.1 மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**எழுவினாக்களுக்கான தீர்வு** :

5. **எழுவினாக்கள் 1, 2 –க்கான தீர்வு** :

1. வாதிகள் தாவா சொத்தில் தனித்த சுவாதீனத்தில் உள்ளார்களா?
2. வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

5.1) தாவா 1வது இலக்க சொத்து வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா 2வது இலக்க சொத்தானது வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் மூலம் 1ம் வாதியின் தகப்பனார் இருளப்பத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றும், 3வது இலக்க சொத்து 3ம் வாதியின் மூதாதையர்களால் வாய்மொழியாக கிரையம் பெற்று 1 முதல் 3 இலக்க சொத்துக்களை 1ம் வாதி அனுபவம் செய்து வந்ததாகவும், 1ம் வாதியின் இறப்பிற்கு பிறகு 2 முதல் 8 வாதிகளுக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வருவதாகவும் வாதி தரப்பு வழக்காக உள்ளது.

5.2) தாவா 1வது இலக்க சொத்தானது 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி 1வது இலக்க சொத்து 1ம் வாதிக்கு பாத்தியப்பட்ட நிலையில், 2வது இலக்க சொத்தானது சந்து என்றும், அதன் சர்வே எண்.214/22 என்றும், அதன்படி 2வது இலக்க சொத்தை எவ்வகையிலாவது கைப்பற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு மூலம் எதுவும் இல்லை என்பதால் அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

5.3) இந்நிலையில், 1 முதல் 3 இலக்க சொத்துக்கள் வாதிகள் அனுபவத்தில் இருந்துள்ளது என்பதற்கு ஆதரவாக வாதிகள் தரப்பில் 1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணமானது 1வது இலக்க சொத்தை பொறுத்து 1ம் வாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணமாக உள்ளது. வா.சா.ஆ.5 ஆவணமானது 1வது இலக்க சொத்தை பொறுத்து 1ம் வாதி பெயரில் ஏற்பட்ட வீட்டு வரி இரசீதுகளாகவும் காணப்பட்டுள்ளது. அதன்படி 1வது இலக்க சொத்து 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வருவதாக வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

5.4) 2வது இலக்க சொத்தானது வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் 1ம் வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்று வாதிகள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டு வா.சா.ஆ.2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3வது இலக்க சொத்தானது வாதிகளின் மூதாதையர்களுக்கு வாய்மொழியான கிரையம் மூலம் பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வருவதாகவும் வாதிகள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது. எனினும் 2, 3 இலக்க சொத்துக்களில் வாதிகள் அனுபவம் செய்து வருவதற்கு ஆதரவாக எவ்வித சான்றாவணங்களும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

5.5) மேலும் 2, 3 இலக்க சொத்துக்களை வாதிகள் அனுபவம் செய்து வருவதாக வா.சா.1 மட்டுமே சாட்சியமளித்துள்ளார். மேற்படி 2, 3 இலக்க சொத்துக்களை பொறுத்து சரியான முறையில் அடையாளம் காணும் விதமாக புல எண்கள் எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை. அதற்கான

காரணமோ, விளக்கமோ வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. 1வது இலக்க சொத்தின் புல எண்.214/21 என்று குறிப்பிட்டுள்ள நிலையில், அதன் அருகே தான் 2, 3 இலக்க சொத்துக்கள் உள்ளதாக எடுத்துரைத்த போதும், 2, 3 இலக்க சொத்துக்களுக்கான புல எண்கள் எதுவும் வாதிகள் தரப்பில் எடுத்துரைக்கவில்லை.

5.6) மேலும், சி.பி.சி கட்டளை 7 விதி 3ல் குறிப்பிட்டுள்ளவாறு வழக்கு சொத்தை அடையாளம் காணும் விதமாக வழக்கு சொத்து விவரங்கள் வழக்குரையில் குறிப்பிட வேண்டியது சட்டப்படியானது ஆகும். மேற்படி, கட்டளை 7 விதி 3ன் கீழ் ஒரு சொத்து விவரமானது புல எண் அல்லது நான்கு எல்லைகள் மூலம் அடையாளம் காணும்விதமாக குறிப்பிடப்பட வேண்டியது சட்டப்படியானது ஆகும். இந்நிலையில், 2வது இலக்க சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட சந்து என்று எதிர்வாதம் செய்து வந்த நிலையிலும், 2வது இலக்க சொத்தின் புல எண்.214/22 என்றும் எதிர்வாதம் செய்து வந்த நிலையிலும், வா.சா.ஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ள கிரைய சொத்தானது வழக்கு சொத்தின் அருகில் இல்லை என்றும் எதிர்வாதம் செய்து வந்த நிலையிலும், 2வது இலக்க சொத்தை பொறுத்து சரியான புல எண்ணோ அல்லது உரிய முறையில் அடையாளம் காணும் விதமாக நான்கு எல்லைகளோ குறிப்பிட வேண்டியது சட்டப்படியானது ஆகும்.

5.7) எனினும், 2வது இலக்க சொத்து விவரத்தில் தங்களுடைய காலி இடத்திற்கும் தெற்கு நம்முடைய கைவசம் உள்ள மனைக்கும் மேற்கு மற்றும் வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 2வது இலக்க

சொத்தை எழுதி வாங்கிய நபரின் இடத்திற்கு தெற்கு என்றும், எழுதி கொடுத்த நபரின் இடத்திற்கு மேற்கு மற்றும் வடக்கு என்று தெரிய வருகிறது. மேற்படி சொத்து விவரத்தின்படி நான்கு எல்லைகளானது மேற்படி தரப்பினர்களுக்கு பாத்தியப்பட்ட எந்த இடம் என்று தெளிவாக கூறப்பட வில்லை.

5.8) மேலும், 3வது இலக்க சொத்தின் விஸ்தீரணமானது வழக்கு சொத்து விவரத்தில் கிழமேல் ஜாதியடி 200ம், தென்வடல் ஜாதியடி 10ம் ஆக மொத்தம் தென்வடல் 33 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆக மொத்தம் தென்வடல் 33 அடி என்று எதன் அடிப்படையில் 3வது இலக்க சொத்தை பொறுத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்று வாதிகள் தரப்பில் எவ்வித காரணமோ, விளக்கமோ குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில், 2, 3 இலக்க சொத்துக்களானது அடையாளம் காட்டும் விதமாக நீ.மா.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2 அறிக்கை மற்றும் வரைபடத்திலும் எவ்வித குறிப்புகளும் காணப்படவில்லை.

5.9) மேற்படி நீதிமன்ற ஆணையரை வாதிகள் தரப்பில் வா.சா.2 ஆக விசாரணை செய்தபோதும், 2, 3 இலக்க சொத்துக்களை அடையாளம் காட்டும்விதாக எவ்வித விசாரணையும் மேற்கொள்ளவில்லை. மேலும், அசல் வழக்கானது 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது. இந்நிலையில், 1ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருந்த போது இறந்து விட்டதால், அவரது வாரிகளாக 2 முதல் 7 பிரதிவாதிகள் அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 4ம் பிரதிவாதி இறந்த நிலையில் 8 முதல் 10 பிரதிவாதிகள் அவரது வாரிசுகளாக அசல் வழக்கில்

சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில், அசல் வழக்கானது வழக்கு சொத்துக்களை பொறுத்து 1ம் வாதியின் அனுபவத்தை 1ம் பிரதிவாதி இடைஞ்சல் செய்ததால் வழக்கு மூலம் எழுந்ததாகவும், அதன்படி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் வழக்குரையில் காணப்பட்டுள்ளது.

5.10) இந்நிலையில், 1ம் பிரதிவாதி இறந்த நிலையில், 2 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குமூலம் எழுந்ததாகவோ, 2 முதல் 10 பிரதிவாதிகள் வாதிகள் அனுபவத்தை இடைஞ்சல் செய்ததாகவோ, வாதிகளின் வழக்குரையிலோ, வழக்கு மூலத்திலோ எதுவும் காணப்படவில்லை. 1ம் பிரதிவாதி இறந்த பின்னிட்டு வழக்கு சொத்துக்களில் வாதிகளின் அனுபவத்தை 2 முதல் 10 பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ததாக வாதிகளின் வழக்குரையில் எவ்வித திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

5.11) மேலும், வழக்கு பரிகாரத்திலும் 1ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டுமே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாறாக, 1ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளுக்கு எதிராகவும், அவரது முகவர் மற்றும் வகையாட்களுக்கு எதிராகவும் அசல் வழக்கில் பரிகாரம் எதுவும் கேட்கப்படவில்லை. அதன்படி, அசல் வழக்கில் 2 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் வாதிகள் தரப்பில் கேட்கப்படவில்லை. இறந்த 1ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டுமே பரிகாரம் கோரப்பட்டுள்ளது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், 2 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு மூலமோ,

வழக்கு பரிகாரமோ இல்லாத நிலையில், 2 முதல் 10 பிரதிவாதிகள் அவசியமற்ற தரப்பினர்கள் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5.12) 2, 3இலக்க சொத்துக்கள் வழக்கு சொத்து விவரத்தில் உரிய முறையில் அடையாளம் காணும்விதமாகவும், சரியான முறையிலும் குறிப்பிட்டு வழக்குரை தாக்கல் செய்யாத நிலையிலும், 2, 3 இலக்க சொத்துக்களின் அனுபவத்தில் வாதிகள்தான் உள்ளார்கள் என்பதை நிரூபணம் செய்யும்விதமாக சான்றாவணங்கள் எதுவும் வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தாத நிலையிலும், 1ம் இலக்க சொத்தை பொறுத்து மட்டுமே வாதிகள் அனுபவத்தில் உள்ளதாக வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், 2, 3 இலக்க சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் உள்ளதாக வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5.13) 2, 3 இலக்க சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்த நிலையிலும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 2 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு மூலமோ, பரிகாரமோ இல்லை என்பதால் 2 முதல் 10 பிரதிவாதிகள் இவ்வழக்கில் அவசியமற்ற தரப்பினர்கள் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்த நிலையிலும், வழக்கு சொத்துக்கள் முழுவதும் வாதிகள் அனுபவத்தில் இருந்து வருவதாக வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும், வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினாக்கள் –1, 2ற்கு  வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

6. **<u>எழுவினா 3 –க்கான தீர்வு</u>** :

3. இதர பரிகாரம் என்ன?

இவ்வழக்கில் வழக்கு சொத்தை பொறுத்து வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையிலும், எழுவினாக்கள் 1, 2க்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ள நிலையிலும், இவ்வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி வாதிகளுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் எழுவினா –3ற்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 07.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.07 13:08:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**இணைப்பு** :

**1. வாதி தரப்பு சாட்சிகள்** :

வா.சா.1. முருகேசன்
வா.சா.2. சீனி (நீதிமன்ற ஆணையர்)

**2. வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1. | 21.04.1964ம் தேதியிட்ட கிரைய ஆவணம் அசல். |
| வா.சா.ஆ.2. | 06.06.1955ம் தேதியிட்ட கிரைய ஆவணம் அசல். |
| வா.சா.ஆ.3. | 08.02.1943ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய பத்திரம். |
| வா.சா.ஆ.4. | தோராய பட்டா உண்மைநகல். |
| வா.சா.ஆ.5. | வீட்டு வரி இரசீது(எண்ணம்9) அசல். |
| வா.சா.ஆ.6. | 29.05.1954ம் தேதியிட்ட கிரைய ஆவணம் அசல். |

**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :**

பி.வா.சா.1. விக்னேஷ்வரன்

பி.வா.சா.2. அமல்ராஜ்

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1. | 27.10.2025ம் தேதியிட்ட நத்தம் பட்டா கணினி நகல். |
| பி.வா.சா.ஆ.2. | வட்டாட்சியரின் விசாரணை அறிவிப்பு சார்பு நகல். |
| பி.வா.சா.ஆ.3. | அ பதிவேடு நத்தம் பட்டா எண்.570 பதிவிறக்க நகல். |
| பி.வா.சா.ஆ.4. | 27.10.2025ம் தேதியிட்ட அ பதிவேடு நத்தம் பதிவிறக்க நகல். |
| பி.வா.சா.ஆ.5. | அ பதிவேடு நத்தம் பட்டா எண்.857 பதிவிறக்க நகல். |
| பி.வா.சா.ஆ.6. | 27.10.2025ம் தேதியிட்ட நத்தம் பட்டா எண்.857 பதிவிறக்க நகல். |
| பி.வா.சா.ஆ.7. | அ பதிவேடு நத்தம் பட்டா எண்.1172 பதிவிறக்க நகல். |

பி.வா.சா.ஆ.8. நத்தம் பட்டா. பட்டா எண்.1172. பதிவிறக்க நகல்.

பி.வா.சா.ஆ.9. அ பதிவேடு, பட்டா எண்.559 பதிவிறக்க நகல்.

பி.வா.சா.ஆ.10. நத்தம் பட்டா. பட்டா எண்.559 பதிவிறக்க நகல்.

**5. நீதிமன்ற சாட்சிகள் :** இல்லை.

**6. நீதிமன்ற சான்றாவணங்கள் :**

நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையர் அறிக்கை

நீ.ம.சா.ஆ.2 மாதிரி வரைபடம்

**7. சாட்சிய சான்றாவணங்கள் :** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.07 13:08:46 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

அசல் வழக்கு எண்.121/2006
செவ்வை – தீர்ப்புரை
நாள்: 07.03.2026